REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 298

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ 7—8—0

சென்னை: வைகாசி 15உ வெள்ளி (28—5—54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 16உ சனி (29—5—54)

பொய், பொய்! வடிகட்டின பொய்!!

தேசிய ஏடுகளின் பித்தலாட்டம் அம்பலம்!

குடும்ப நகை பற்றிய செய்திக்கு நேருவின் மறுப்பு

பிறந்த நாள் பரிசான அசோக ஸ்தூபியையே கடனுக்குத் தருகிறார்

சிம்லா, மே 27—

"என்னிடம் குடும்ப நகைகள் எதுவும் கிடையாது; அவைகளை நான் தேசியக் கடனுக்குக் கொடுத்ததாக வந்த செய்தி தவறானது," என்று பண்டித நேரு அறிக்கை ஒன்று விடுத்திருக்கிறார்.

அவர் அறிக்கை மேலும் கூறுவதாவது:—

"நான் என் குடும்ப நகைகளை—ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள நகைகளை தேசியக் கடன் பத்திரங்களுக்கு அளித்ததாகவும், பின்னர் அப்பணத்தை குழந்தைகள் நலத்துக்குச் செலவிட வேண்டுமென்று தெரிவித்திருப்பதாகவும் பத்திரிகைகளில் பார்த்தேன்.

என் குடும்ப நகைகள் என்று எதுவும் கிடையாது; என் மனைவியின் நகைகள் 30 ஆண்டுகளுக்கு முன்பே பயன்படுத்தப்பட்டு விட்டன.

என்னுடைய பிறந்த நாள் பரிசாக 1949-ல் பம்பாய் மக்கள் எனக்குப் பரிசாக அளித்த தங்கத்தினால் செய்யப்பட்ட அசோக ஸ்தூபி ஒன்றை நான் தேசியக்கடனுக்காக அளித்திருக்கிறேன்.

தங்கத்தால் செய்யப்பட்டு வைரங்கள் பதிக்கப்பட்ட இந்த ஸ்தூபியை கடன் காலத்திற்குப் பின் தேசியப் பொருட் காட்சி சாலையில் வைக்கப்படும்" என்றும் தெரிவித்தார்.

சென்னையில் ஒரு லட்சம் டன் அரிசி

மத்திய அரசாங்கம் சேமிப்பு செய்யும்

சென்னை, மே 25—

ஒரு லட்சம் டன் அரிசி சென்னையில் சேமிப்பாக வைத்திருக்கப்படும் என்று தெரிகிறது. இந்த ஒரு லட்சம் டன் அரிசி மத்திய அரசாங்கம் இவ்வருடம் சேகரிக்கவிருக்கிற 10 லட்சம் டன் அரிசி சேமிப்பில் ஒரு பகுதியாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது. இந்த தகவல், மத்திய அரசாங்க உதவி உணவு மந்திரி திரு. வி. கிருஷ்ணப்பா அவர்களால் அறிவிக்கப்பட்டது.

உ. பி.—யில் சத்தியாக்கிரகம்

பிரஜா - சோஷலிஸ்டுகள் கைது

★

மீரத், மே 27—

உத்திர பிரதேச சர்க்கார், பாசன வரியை அதிகப்படுத்தியதை எதிர்த்து உ. பி சோஷலிஸ்டு கட்சியினர் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர்; சர்க்கார் 9 பேர்களைக் கைது செய்தனர்.

உ. பி சோஷலிஸ்டு கட்சியின் செயலாளர் மகாராஜ் பார்தி, ஷிர்த்தி சான் பஞ்சாயத் காரியதரிசி ஹார்பன்சிங், ஆக்ரா பிரஜா—சோ. கட்சித் தலைவர் ராம சந்திரா ஆகியோர் கைது செய்யப்பட்ட தலைவர்களில் உள்ளனர்.

பாக் அரசியல் கொந்தளிப்பு

கி. வங்கக் கவர்னர், பாக் சேனாதிபதி கராச்சி செல்கின்றனர்

பஸ்லுல் ஹக் விலக்கப்படுவார்?

கராச்சி, மே 27—

கிழக்கு வங்க கவர்னரும் கிழக்கு வங்கத்தின் பிரதான கேந்திரங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவ அதிகாரிகளும், கராச்சிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

பாகிஸ்தான் சேனாதிபதி ஜெனரல் முகம்மது அயூப்கான் கடந்த இரண்டு நாட்களாக கவர்னர் ஜெனரலுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன.

இதற்கிடையில் கிழக்கு வங்க முதல் அமைச்சர் ஹக், கவர்னர் ஜெனரலுடனும், முகமது அலியுடனும் கலந்து பேசினார். கிழக்குப் பாகிஸ்தானின் கம்யூனிஸ்டு கட்சியைத் தடை செய்ய ஒப்புக் கொள்வது அல்லது பதவியை விட்டு விலகுவது என்ற பிரச்சினையில் அவரது நிலைமை உள்ளது. ஹக்கின் நண்பர்கள் அவர் பதவியை விட்டுப் போவதே நல்லது என்று கருதுகின்றனர்.

பாக். சர்க்கார் பாதுகாப்பு இலாகா காரியதரிசியான தோழர் இஸ்கந்தர் மிர்ஸாவை கிழக்கு வங்க கவர்னராக்க யோசிக்கின்றனர் என்று தெரிகிறது.

பொன்னேரி, திருவள்ளூர் தமிழ்ப் பகுதிகள்

ஆந்திரத்தோடு இணைக்கும் கோரிக்கைக்கு எதிர்ப்பு

ஆந்திரகேசரிக்கு தி.மு.க. எச்சரிக்கை

திருச்சியில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் குழுவில் நியமிக்கப்பட்ட சித்தூர் மாவட்ட தமிழ்ப் பகுதி இணைப்புக் குழுவின் முதற்கூட்டம் 27-5-54 இரவு 9-30-க்கு ஏகாம்பரக் குப்பத்தில் (சித்தூர் மாவட்டம்) கழகப் பணிமனையில், குழுவின் தலைவர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தனி அழைப்பின் பேரில் தி. மு. கழகத் துணைச் செயலாளர் இரா, நெடுஞ்செழியன் அவர்களும் கலந்து கொண்டார். சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளனைத்தும் தமிழகத்தில் சேர்க்கவேண்டிய திட்டங்களைக் குறித்து ஆலோசிக்கப்பட்டதுடன், கீழ்க்கண்ட முடிவுகளும் செய்யப்பட்டன:—

1. அண்மையில் ஆந்திரநாட்டு முதலமைச்சர், டங்குடூரி பிரகாசம் அவர்கள், ராஜ்ய புனரமைப்புக் குழுவினரிடம் சாட்சியம் அளிக்கையில் சென்னை நகரைத் தனி மாகாணமாக்க வேண்டுமென்றும், பொன்னேரி, திருவள்ளூர் போன்ற நகரங்களையும் ஆந்திர நாட்டுடன் சேர்க்கவேண்டுமென்றும் கூறியிருப்பதை இக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், இவ்வித பேச்சுக்களைப் பேசி, ஆந்திர—தமிழ் மக்களின் உறவைக் கெடுத்தும், வீண் மனக்கசப்பை உண்டாக்குவதும் அரசியல் நேர்மையாகாது என்பதை ஆந்திர முதலமைச்சருக்கும், ஆந்திர சர்க்காருக்கும் அறிவுறுத்துகிறது.

2. சித்தூர் மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகளிலுள்ள தி. மு. கழகக் கிளைகளிலிருந்து பிரதிநிதிகளைச் சேர்த்து இக்குழுவின் எண்ணிக்கையை அதிகப் படுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

3. ஜூலை முதல் வாரத்தில் சித்தூர் மாவட்ட தமிழ்ப் பகுதிகளில் தீவிர பிரசாரம் செய்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டது.

ரவி நதி தண்ணீரை — பாக். சர்க்கார் திருப்புகிறது!

உலக பாங்கியின் தீர்ப்புக்கு விரோதமான செய்கை!

அமிர்தசரஸ், மே 27—

பாகிஸ்தான் சர்க்கார் தோராபுரானக் கன்னூமிடத்தில் ரவி நதியினைத் தடுத்து நதியின் தண்ணீரை தங்கள் பகுதிக்குத் திருப்பிவிட்டனர் என்று தெரிகிறது; இதன் மூலம் 22 இந்திய கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன.

அமிர்தசரஸ், குருதாஸ்பூர் ஜில்லா வாசிகளின் பிரதிநிதிகள் கிழக்கு பஞ்சாப் சர்க்காரை அணுகி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்.

கால்வாய்த் தண்ணீர் பிரச்சினைக்கு உலக பாங்கி செய்த சமரச ஏற்பாட்டை ஒட்டியே இந்த கோரிக்கை சர்க்காரிடம் தரப்பட்டது.

உலக பாங்கியின் தீர்ப்பின்படி சட்லஜ் நதிகளின் தண்ணீரை இந்தியாவும், இந்தூஸ், ஜீலம், சீனுப் நதிகளின் தண்ணீரை பாகிஸ்தானும் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது.

இத்தீர்ப்பை இந்திய சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறது; பாக் சர்க்கார் ஒப்புக் கொண்டதா என்பது தெரியவில்லை.

1953-ல், இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குக் கப்பலில் சென்ற மொத்தம் 56,762 பிரயாணிகளில் சுமார் மூன்றி லொரு பகுதியினர் இந்தியக் கப்பல்களில் பிரயாணம் செய்தனர்.

கல்லக்குடி அறப்போர் வீரர் குமாரவேல் மறைந்தார்

ஆறு திங்கள் கடுங்காவல் அனுபவித்த இளைஞர்

★

கல்லக்குடி அறப்போரில் தோழர் மு கருணாநிதியுடன் சிறை சென்று ஆறு மாத கடுங்காவல் தண்டனை அனுபவித்தவரும், மணப்பாறை தி. மு கழகத்தின் முன்னணித் தொண்டருமான தோழர் குமாரவேல் சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்து, 27—5—54-ல் காலமானார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அவரது பிரிவால் வாடும் அன்னாரது பெற்றோருக்கும், உற்றாருக்கும், கழகத் தோழர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.—(ஆ-ர்.)

காங்கிரஸ் தோழர் உண்ணாவிரதம்

பஸ் கட்டணத்தைக் குறைக்கக் கோரிக்கை

ராஜ்கோட், மே 27—

அதிகப்படுத்தப்பட்ட பஸ் கட்டணத்தை எதிர்த்த ராஜ்கோட்டின் பிரபல காங்கிரஸ் தோழர் சாம்புராய் திருவேதி என்பவரை சர்க்கார் கைது செய்தனர்.

காரிடார் கூட்டுறவு கழக பஸ் ஒன்றில் அவர் ஏறிக்கொண்டு உயர்த்தப்பட்ட கட்டணமான மூக்காலணாவை, தான் தரமுடியாது என்றும், எப்போதும் போல் அரையணா தான் தரமுடியும் என்றும் அவர் கூறியதால் தான் அவர் கைது செய்யப்பட்டார்.

இச்செய்தி நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஜாமீனில் வெளிவர மறுத்த தோழர் திருவேதி ஜெயிலில் உண்ணாவிரதம் இருக்கிறார்.

முன்போலவே கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்பதே அவர் கோரிக்கை!

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 28—5—54 வெள்ளி

இமயம் முதல் குமரி வரை......!

மகா கோசலம், மகா விதர்ப்பம், மகா குஜராத், மகாராஷ்டிரம், வளர்ந்த வங்கம், சம்யுக்த கர்நாடகம், விசால ஆந்திரம், ஐக்கிய கேரளம், மகா இமாசலம்... ...வளருகிறது, வளருகிறது பட்டியல்! வாட்டமும் திகைப்பும் பெருகுகிறது டில்லிக்கு!'

நேரு பண்டிதரோ, 'இது ஒரு நோய்,' என்றே கருதுகிறார்.

இந்தியாவை ஒரு குடையின் கீழ் ஆள எண்ணும் புதிய பாதுஷாக்களுக்கோ, மனம் பதறுகிறது—'ஏன் மக்கள் இப்படிக் கெட்டுப் போகிறார்கள்'—என்று கோபத்துடன் கேட்கிறார்கள்; 'பிரிவினை மனப்பான்மை இப்படியா பேயாட்டமாடுவது,' என்று கேட்கிறார்கள்; முகத்தைச் சுளித்துக் கொள்கிறார்கள்!

'ஏன் கிளம்புகிறது இந்த எண்ணம்,'—என்று ஆராயக் கூட அவர்களுக்கு அவகாசம் இல்லை; ஆத்திரம் மேலிடுகிறது; 'எல்லாம் சுயநலம் தான் காரணம்,'—என்று வசைபாடி விடுகிறார்கள்.

'தனித் தனி ராஜ்யங்கள் தேடுவது, அவரவர்கள் அமைச்சர்களாவதற்குத் தான்; வேறெதற்கு'—என்று குற்றம் சாட்டும் முறையிலே குத்திக் காட்டுகிறார்கள்!

ஆனால், 'மொழிவழியாக நாடு பிரித்தமைக்கப்பட வேண்டும்; அப்போதுதான், அந்தந்த இடத்து மக்களும் தத்தமது தனிப் பண்புக்கு ஏற்ற வகையிலே முன்னேற்றம் காண முடியும்,' என்பதை எடுத்துக் கூறி, விடுதலை கிடைத்ததும் அதற்கானவை செய்வதாக வாக்களித்தவர்கள் காங்கிரஸ்காரர்கள்தாம்!

இன்றோ, இந்தியப் பூபாகம் முழுவதிலும் தமது ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டுமென்ற சுதேச்சாதிகார உணர்ச்சி பெருங் காங்கிரஸ் தலைவர்களுக்குத் தடித்துப் போய் விட்டதால்—'தூய்மையானது; தேவையானது; நியாயமானது; தேசியத்துக்கு ஒத்தது' என்று, எந்தமொழி வழி அரசு அமைப்புத் தத்துவத்தைப் போற்றி வந்தனரோ அதனையே, 'நாட்டைக் கெடுக்கும் திட்டம்' என்றும், 'பிளவுச் சக்தி' என்றும், 'பிற்போக்குக் கொள்கை' என்றும் பேசி ஏசுகிறார்கள்.

'இந்தியா—ஒரே நாடு' என்ற பொய்யிலே இவர்கள் கட்டுண்டு போவானேன்—காலப் போக்கு அந்தப் புரட்டை உடைத்திடும் போது பதறுவானேன்—புரண்டழுவானேன்—என்று கேட்கிறோம்!

'இந்தியா—ஒன்று' என்று, எப்போது ஆக்கப்பட்டது—ஒப்புக்காகவாகிலும்? வெள்ளையரின் ஈட்டி முனை தீட்டிய போலித் தத்துவம் தானே அது?—ஏன் அதனிடம் அவ்வளவு இலயித்துவிட வேண்டும்—என்று கேட்கிறோம்!

பூகோளமாகட்டும், சரித்திரமாகட்டும்; மொழி அமைப்பு முறையாகட்டும்; பண்பாடுதானாகட்டும்; — இந்தியாவை ஒன்று என்று உளமார ஒப்புக்கொள்ளச் செய்வதாக இருக்கிறதா — என்று கேட்கிறோம்!

ஏன், 'இந்தியா' எனும் ஒரு போலிக்கு, இத்துணை பசைப்பு!

நிர்வாகச் சௌகரியத்துக்காக அன்னியன், 'இந்தியா' என்ற அமைப்புக்குள், தன் வேங்கைக் காட்டைப் பொருத்திக் கொண்டான்; தன் ஆதிக்கம் குன்றாது இருப்பதற்காக, மத்திய சர்க்காரைப் பலமுள்ளதாக்கி வைத்துக் கொண்டான்!

மாடு அடங்கி நடக்க மூக்கணாங்கயிறு; போடக் கண்டவன், மயிலுக்கும் அது போலப் போடுவதா—மதியிலி,' என்று கூறுரா!

எதேச்சாதிகாரி, எந்தச் சமயத்திலும், எந்தப் பகுதியிலும் தன் ஆதிக்கம் செல்லத்தக்க விதமாக ஒரு அமைப்பு ஏற்படுத்திக் கொண்டான்—அதனை 'இந்தியா' என்று பெயரிட்டழைத்தான்!

டில்லியில் முடிசூடா மன்னராகிவிட்டுள்ள காங்கிரஸ் பெருந் தலைவர்கள், அதே முறையை இன்று பின்பற்ற விரும்புகிறார்கள்; காரணம், இவர்களும் ஒரு புதிய ஏகாதிபத்தியத்தை உருவாக்கி வருகிறார்கள்.

புலிக்கு, வேட்டைக்காடு எங்ஙனம் விரிந்தும் பரந்தும் இருக்க வேண்டுமோ அது போல-ஏகாதிபத்திய ஆசைக்காரர்களும், நாடு, விரிந்து பரந்து இருத்தல் வேண்டும் என்று எண்ணுவதிலே, நமது 'சக்கரம்' ஆயிரம் மைல் அகலமும், அதே அளவு நீளமும் கொண்ட பூபாகத்திலே, ஆட்சி செலுத்துகிறது,' என்று கூறிக் கொள்வதிலே, ஒரு தனிச் சுவை காண்கிறார்கள்!

'நமது சொல் இமயம் முதல் குமரிவரை, சட்டமாகி இருக்கிறது,' என்று எண்ணும் போது அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி கிளம்புகிறது—மமதையாகக் கூட அது மாறிவிடுகிறது!!

வெள்ளை ஏகாதிபத்தியவாதி சொல்லிக் கொண்டிலலையா—'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே சூரியன் அஸ்தமிப்பதே இல்லை,' என்று! அதுபோலவேதில்லி தேவதைகள்—'இமயம் முதல் குமரிவரை, எமது ஆதிபத்தியம்,' என்று கூறிக்கொள்வதிலே, பெருமை அடைகிறார்கள்!!

எனவேதான், அவர்கள் மொழிவழி அமைப்பு கேட்பவர்களை, 'சுயநலக்காரர்' என்று சுடுசொல் கூறுகிறார்கள்; தனிஅரசு கேட்கும் நமவிடர்களைப் போ, 'காட்டு மிராண்டிகள்' என்றே கூறி விடுகிறார்கள்; அவ்வளவு ஆத்திரம் பிறக்கிறது—'ஆதியத்தியம் குறையும்,' என்று தெரிகிறபோது!

'எங்கள் காலம் வரையிலாவது, ஆதிபத்திய அளவைக் குறைக்காமலிருங்கள்!—என்று கெஞ்சுவதுபோல, பம்பாய் வட்ட காங்கிரஸ் தலைவர் பட்டீல், 'இன்னும் இருபத்தைந்து வருட காலத்துக்கு இந்த மொழிவழி மாகாண அமைப்பு பிரச்சினையை ஒத்திவைக்க வேண்டும் என்று யோசனை கூறுகிறார். மொழிவழி மாகாண அமைப்பை எதிர்க்கவே அவர் ஓர் இயக்கம் காண்கிறாராம்!

உரிமைக் கோரிக்கையை மறுப்பதும் எதிர்ப்பதும், மழுப்புவதும் ஒத்திப் போடுவதும், எந்த நிலையை உண்டாக்கும் என்பதை, பாகிஸ்தான் காட்டுகிறது! இதைக் கண்டும் தெளிவு பெறக் காணோம் பெருந் தலைவர்கள்!

இந்தியப் பூபாகம் முழுவதையும் அன்னியன் பிடித்தாண்டபோது, அப்பூபாகம் முழுவதும் போர்க்கோலம் பூண்டது; 'அனைவரும் ஒன்று கூடி, அன்னியனை ஒழித்துக் கட்டவேண்டும்,' என்ற திட்டம் பிறந்தது.

வங்கத்துத் தாசும், பாஞ்சாலத்து லஜபதியும், ஐக்கிய மாகாண மோதிலாலும், மராத்திய திலகரும், குஜராத் காந்தியாரும், ஈரோடு பெரியாரும், நெல்லைச் சிதம்பரனாரும், ஆந்திரப் பிரகாசமும், கேரளத்துக் கேளப்பனும்—என்ற முறையில், இந்தியப் பூபாகத்தில் ஒவ்வொரு நாடும் தத்தமது தலைவரின் கீழ் திரண்டு நின்றது; விரண்டோடினான் வெள்ளையன்!

அதற்குப் பிறகு, 'போர்க்காலச் சூழ்நிலை என்றென்றும் நீடித்திருக்கும்,' என்று எண்ணுவானேன்—நிலைமை, உண்மையை உணர்த்தும் போது இடர்படுவானேன்!

எந்த ஒரு நாட்டுக்கும் அந்த நாட்டு மக்களுடைய நிலையையும் நினைப்பையும் அறியவும், அவர்களின் இதயத்தைத் தொடவும், அவர்களுடைய அறிவாற்றலைக் கண்டறிந்து திரட்டவும், நடத்திச் செல்லவும், அந்த நாட்டுத் தலைவரால் தான் முடியுமே தவிர, பிறரால்—அவர்கள் மேதைகளாகட்டும், மனிதகுல மாணிக்கங்களாகட்டும்—எங்ஙனம் இயலும்?

நேரு பண்டிதருக்கு, இலங்கை வாழ் தமிழரின் அவதி புரிகிறதா?

திராவிடர் சோற்றுக்குத் திண்டாடியபோது, முன்ஷிக்கு, பருத்திக் கொட்டை தீயச் சாப்பிடச் சொல்லும் புத்திதானே பிறந்தது—கண்ணீர் சிந்திற்று!

குடும்பப் பாசம் போன்ற தோர் கூட்டு உணர்ச்சி தான் ஒரு நாட்டுக்கு அரண்; அதனை, இந்தியா முழுவதுக்கும் சேர்த்து, ஓரிடத்தில் பெற முடியும் என்று எண்ணுவதே பைத்தியக்காரத்தனமாகும்!

துப்பாக்கி முனை கொண்டு தோழமையை மலரச் செய்ய முடியாது; சட்டத்தைக் கொண்டு, 'சகோதரத்துவ'த்தைக் கண்டுவிட முடியாது! இதயத்திலிருந்து கிளம்ப வேண்டுமே அந்த நாதம்!

'இந்தியா' என்பதோ—

இலவசக் கல்வி போதனை

அக்காலத்திலேயே நீதிக் கட்சி வற்புறுத்தியது

ஜின்னாவும் வற்புறுத்தியுள்ளார் அக்கொள்கை அரசியல் சட்டத்தில்

இடம் பெற்றதில் வியப்பில்லை

"நாடு முழுமையும் கல்வி பரவ வேண்டுமென்ற கோரிக்கை, இந்திய அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவின்படி அவசியமாகிறது." என்ற கருத்துப்பட சென்னை சட்டசபையில் சமீபத்தில் பேசப்பட்டது; ஆனால் சரித்திர பூர்வமாக இது உண்மையில்லை; 1909-ல் கோகலே அவர்கள், இலவசக் கட்டாயக் கல்வி வேண்டுமென்ற மசோதாவை ஏகாதிபத்திய சட்ட சபையில் கொண்டுவந்தார்; ஆகவே இக்கோரிக்கை இன்று தோற்றுவிக்கப்பட்டது அல்ல; ஐம்பது ஆண்டு காலமாக இக்கோரிக்கை வற்புறுத்தப்படுகிறது;

'அந்நிய ஆட்சிக் காலத்திலேயே திரு. கே. வி. ரெட்டி போன்றவர்களால், 'ராஜ்ய சர்க்காரின் வருமானத்தின் முதல் பொறுப்பு ஆரம்பக் கல்விதான்,' என்று மாகாண சட்ட சபையில் வற்புறுத்தப்பட்டது;

"சென்னை சட்ட சபையில் கல்விக்காக உண்டாகும் பொருளாதார நெருக்கடி பற்றிய பிரச்சினையை எண்ணும்போது காலஞ்சென்ற ஜின்னா அவர்கள், 1911-ல் மத்திய சட்ட சபையில் கூறிய கீழ்க்கண்ட வாக்கியத்தையே சொல்ல விரும்புகிறேன்:—

'பணத்தைக் கண்டு பிடியுங்கள்! பணத்தைக் கண்டு பிடியுங்கள்!! பணத்தைக் கண்டு பிடியுங்கள்!!! உங்களால் போதிய பணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றால், புதிய வரிகளையாவது கண்டு பிடியுங்கள்! நீங்கள் இப்போது ஆமை வேகத்தில் செல்கின்றீர்கள்; இப்போக்கினை நாங்கள் விரும்பவில்லை,"

இவ்வாறு 25—5—54 'இந்து' இதழில் கோவையைச் சேர்ந்த திரு சிதம்பர ஐயங்கார் என்பவர் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார்.

அதுவும் அங்கேதான்!

★

டில்லி சர்க்கார் அமைக்க இருக்கும் அம்மோனியம் சல்பேட் தொழிற்சாலையை, அம்பாலாவுக்கு அடுத்த நங்கால் எனும் இடத்தில் அமைக்க முடிவு செய்துள்ளனர்.

கற்பனை வீணை; அதன் நரம்புகளும் நைந்து போய்விட்டன; நேரு பண்டிதர் இதனை மீட்டி மீட்டி நாதம் காண விழைகிறார்; இயலாத காரியம்; பயனற்ற வேலை!

எனினும், எதேச்சாதிகார உள்ளம், 'பெரிய அரசு வேண்டும்; இமயம் முதல் குமரி வரை நமது பிடியில் இருக்க வேண்டும்,' என்றுதான் எண்ணும்!

இதுபோலவேதான், முதலாளிகளின் எண்ணமும் இருக்கிறது. அவர்களுக்கு இலாபவேட்டைக் காடாக 'இந்தியா' இருப்பது, இனிப்பளிக்கிறது!

தனி நாடுகள் தோன்றிவிட்டால், டாடாவின் இரும்பும் டால்மியாவின் சிமிட்டியும், பிர்லாவின் பாங்கும், இன்ன பிறவும்—இமயம் முதல் குமரி வரை இன்று படை எடுத்து இரை தேடுவது போல—கொள்ள முடியாது; எனவேதான், முதலாளிகளும், ஏக இந்தியா எனும் ஏற்பாட்டை வலியுறுத்துகிறார்கள்.

தனித்தனி நாடுகள் ஏற்பட்டுவிட்டால், 'வேட்டைக்குத் தங்கு தடை—கேள்வி காவல் ஏற்பட்டுவிடும்,' என்ற அச்சம் அவர்களுக்கு; எனவேதான், அவர்கள், 'இமயம் முதல் குமரி வரை' என்று பேசுகிறார்கள்.

அதுபோன்றே உயர் நிலை அடைந்துவிட்ட பெரிய அதிகாரிகளும், 'இமயம் முதல் குமரி வரை,' என்று பேசுவர்; காரணம், இங்கு கலெக்டராகத் தொடங்கி, டில்லியில் பெரிய உத்தியோகம் பெறுகிற அளவுக்கு வழி இருக்கிறதே — இதை அடைத்து விடுகிறார்களே - என்றகோபம் அவர்களுக்கு! எனவே, அவர்களும் 'இமயம் முதல் குமரி வரை,' என்று பேசுகிறார்கள்.

ஆனால், 'இமயம் முதல் குமரி வரை,' — என்பது இன்று உடைபடுகிறது; மொழி வழி அரசு கேட்பது தான் துவக்கம்: பயணம் ஆரம்பமாகிறது என்று பொருள்!

இதனை, நெறிந்த புருவத்தால தடுத்துவிட முடியாது; நேரு பண்டிதரால் ஒடுக்கிவிட முடியாது; ஆகவேதான் அவரும், 'கமிஷன்' அனுப்பி இருக்கிறார்!

போக்குவரத்து தொழிலாளர் குறைகள்

முதல் அமைச்சரிடம் தூது

சென்னை, மே 26—

சென்னை சர்க்கார் கோச் கட்டும் தொழிற்சாலை, போக்குவரத்து தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த பிரதிநிதிகள் சென்னைப் பிரதமர் கே. காமராஜ் அவர்களை சர்க்கார் காரியாலயத்தில் சந்தித்தனர்.

தங்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்றும், வீட்டு வாடகை அலவன்ஸ் போதிய அளவு தர வேண்டுமென்றும் வற்புறுத்தினர்கள்.

இச்சந்திப்பின்போது போக்குவரத்து அமைச்சர் பி. பரமேஸ்வரன், பராமத்து இலாகா காரியதரிசி, டி. எம். எஸ். மணி, சென்னை நகர போக்குவரத்துக் கமிஷனர் கே. பி. கே. மேனன் ஆகியோர் இருந்தனர்.

தொழிலாளர்கள் சார்பில் தோழர்கள் எஸ். எஸ். ராஜு, ஜி. எம். முதராயர், என். இராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அபிசீனிய மன்னர் — அமெரிக்காவில்!

— (:) —

வலையில் விழ வந்திருக்கிறார்

அபிசீனிய மன்னர் ஹெய்லி செலாசி, அமெரிக்கா வந்து சேர்ந்திருக்கிறார்.

மன்னர், அமெரிக்காவில் சுற்றுப் பயணம் நடத்துவார். அமெரிக்க தலைவர் ஐசன் ஹவருடன் கலந்து பேசுவார்.

கப்பல் தட்டில் அவரை பேட்டி கண்ட நிருபர்களிடம், 'அமெரிக்க முதலாளிகள், அபிசீனியாவில், ரயில்வே — சுரங்கம் — விவசாயம் ஆகிய பல தொழில்களில் மூலதனம் போட முன்வர வேண்டும்'' என்று கருத்துரை கூறினார்.

பெண்களுக்கு சொத்துரிமை

— —

தந்தையின் பரம்பரை அல்லது சொந்த சொத்தில் மகளுக்கு பங்கு பெறும் உரிமை வழங்குவதும், பெண்களுக்கு முழுசொத்துரிமை அளிப்பதுமான இந்து வாரிசு மசோதா இந்திய சர்க்காரின் தனி கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இம்மசோதாவில் தந்தை தனியாக விட்டுப் போகும் சொத்துக்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளது. அவிபக்த குடும்பச் சொத்து இதில் சேர்க்கப்படவில்லை.

இந்துக்கள் உயில் எழுதாமல் விட்டுப்போகும் சொத்து வாரிசு பற்றிய சட்டத்தை திருத்தவும் இந்த மசோதா முற்படுகிறது.

பொதுமக்களின் கருத்தறிய இம்மசோதா வைக்கப்பட்டிருக்கிறது

கேரளத்துக்கு — டில்லி கடன்

— —

கொச்சி துறைமுகத்தில், கடல் நீர் உட்பிரவேசிப்பதைத் தடுக்க கருங்கல் சுவர் எழுப்ப, கேரள சர்க்காருக்கு டில்லி 111 இலட்சம் ரூபாய் கடன் அளித்திருக்கிறது.

பம்பாய் அரசாங்க கல்விக் கொள்கை

— —

அப்பீல் தள்ளுபடி

★

புதுடில்லி, மே 26—

பம்பாய் சர்க்காரின் கல்விக் கொள்கையை எதிர்த்து பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பளித்திருந்தது அல்லவா? அத்தீர்ப்பை எதிர்த்து பம்பாய் சர்க்கார் தாக்கல் செய்த அப்பீலை இந்திய உயர் நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

ஆங்கிலத்தை மட்டும் போதனா மொழியாகக் கொண்டுள்ள பள்ளிகளில் ஆங்கிலோ—இந்தியர்களைத் தவிர வேறு குழந்தைகளைச் சேர்க்கக்கூடாது என்று பம்பாய் சர்க்கார் உத்தரவிட்டிருந்தனர். இந்த உத்தரவு சரியானதல்ல என்று பம்பாய் உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

தமிழகத்துடன் நாஞ்சில் நாட்டை இணைக்கவும்

— —

திரு-கொச்சி அரசியல் அமைதிக்கு அனந்தசயனம் யோசனை

"வடநாடு ஏற்கெனவே மொழிவாரியில் பிரிந்திருக்கிறது; தென்னாட்டிலும் அதுபோன்ற நிலை வேண்டும்; சென்னை ராஜ்யத்துடன் உள்ள மலபார் மாவட்டத்தை திரு—கொச்சியுடன் சேர்த்து ஐக்கிய கேரளம் அமைக்க வேண்டும்; அதுபோலவே திரு - கொச்சியில் உள்ள தமிழ் பேசும் பகுதிகளை தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டியது அவசியமாகும்; காங்கிரஸ் தலைமைப் பீடம் திருவாங்கூர் தமிழர்களின் இக்கோரிக்கைக்கு இணங்கியிருந்தால், திரு—கொச்சியில் உள்ள மந்திரி சபைத் தகராறுகளைத் தவிர்த்திருக்க முடியும்,"

—இவ்வாறு தோழர் அனந்தசயனம் அவர்கள் செகந்திராபாத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

"மொழிவாரி ராஜ்யப் பிரிவினை நாட்டில் அமைதியின்மையை உண்டாக்கும் என்பது கண்டிக்கத்தக்கது; விசால ஆந்திரத்தில் தெலிங்கானாவின் முன்னேற்றம் புறக்கணிக்கப்படும் என்பது சரியல்ல; அதுபோல் தான் ராயல சீமாவும்! ஒரு சில 'சர்க்கார்' ஜில்லாக்கள், மற்ற மாவட்டங்கள் மீது ஆதிக்கம் செலுத்துமென்பது அர்த்தமற்றப் பேச்சாகும்; தெலிங்கானா பகுதி தெலுங்கு கலாச்சாரத்தின் இருப்பிடமாகும்; எத்தனையோ கலைஞர்கள் தெலிங்கானாவில் தோன்றியிருக்கிறார்கள்; விசால ஆந்திரத்தின் முன்னேற்றத்துக்கு தெலிங்கானா எவ்வளவோ உதவும்.

மேலும், மொழி வழிப் பிரிவினை ஏற்பட்டால் ராஜப் பிரமுகர் ஆட்சியிலிருந்து விடுபடலாம்."

ஹைதராபாத்தைத் தலைநகராகக் கொண்ட விசால ஆந்திரா அமைய வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார்.

தி. மு. கழகச் செய்திகள்

குனியமுத்தூர் தி. மு. க.

கழகச் சார்பில் மே தின விழா தோழர் ஓவியர் திருவேங்கடம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வெ. கிருஷ்ண மூர்த்தி, பி. சி. நடராசன், பி. எ., சி. டி. தண்டபாணி ஆகியோர் மே தினம் பிறந்த வரலாறு பற்றி விளக்கவுரை தந்தனர்.

பாகனேரி தி. மு. கழகம்

3—5—54 மாலை 3 மணிக்கு, செயலாளர் பி. திருஞானம் தலைமையில் செயற்குழுவினர் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் உடையப்பா, அருளானந்தசாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டு, முக்கிய முடிவுகள் பல செய்யப்பட்டன.

பா. நா. புதூர் தி. மு. க.

30—4—54-ல் இவ்வூர் தி. மு. க. உறுப்பினர் கூட்டம் தோழர் புரட்சிதாசன் தலைமையில் நடைபெற்றபோது "ஓர முத்தம்" என்னும் நாடகம் நடத்த ஐவர் கொண்ட ஒரு நாடகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது, மற்றும் சில முடிவுகள் செய்யப்பட்டன.

சந்தைப் புதுப்பாளையம் தி. மு. கழகம்

16—5—54 இரவு 8 மணிக்கு தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் என். என். ராசன் தலைமையில் நடைபெற்றபோது, ஜூலை மாத இறுதிக்குள் கழகத் திறப்பு விழாவை நடத்துவதெனவும் அன்றிரவு ஓர் நாடகமும் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது. செயலாளர்: என். என். ராஜன், துணைச் செயலாளர்: பி. எம். கண்ணன், பொருளாளர்: கே. கோபால்சாமி, மாவட்டப் பிரதிநிதி: கே. எம். மாரிமுத்து, செயற்குழு உறுப்பினர்கள்: என். பெருமாள், பி. வி. அண்ணாமலை, பி. இரத்தினம், கே. சி. சேகர், எம். அண்ணாமலை, என். சுந்தரமூர்த்தி, கே. வேணுகோபால் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கொலாபா தி. மு. கழகம்

பம்பாய், மே 16—

மாதாந்திரக் கூட்டம், சொற்பயிற்சி கூட்டங்கள் 5—5—54ல் தோழர் வி. எம். மைக்கேல் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. கே. இராமநாதன் பேசினார். சில முடிவுகள் செய்யப்பட்டன.

வல்லம்படுகை தி. மு. க.

9—5—54 இரவு 9 மணியளவில் தோழர் வி. துரைசாமி தலைமையில் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது, மந்திரி ராமசாமியின் போக்கைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குணவாசல் தி.மு. கழகம்

9—5—54 இரவு 8 மணிக்கு, தோழர் இரா. செயராமன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர் லஷ. ந. இராமலிங்கம் கழகக் குறிக்கோளை விளக்கிப் பேசினார். இறுதியில் அமைச்சர் என். என். இராமசாமியின் போக்கைக் கண்டித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முள்ளுக்குறிச்சியில் தி. மு. க. அமைப்பு

11—5—54ல், நடைபெற்ற கழக அமைப்புக் கூட்டத்தில் பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: க. தங்கவேல்; துணைச் செயலாளர்: இரா. இராமகிருட்டினன்; பொருளாளர்: ஆ. இராமசாமி; மாவட்டப் பிரதிநிதி: கே. அமிர்தலிங்கம்; மற்றும் 12 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகத் துவக்க விழாவை விரைவில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

நெல்லிக்குப்பத்தில் தி.மு.க. பொதுக்கூட்டம்

7—5—54 மாலை 6 மணிக்கு தோழர் இரா. எத்திராசலு தலைமையில், தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஏ. பி. சந்தர், கே. ஆர். சபாபதி பேசிய பின், தோழர் என். வி. நடராசன் தி. மு. கழக கொள்கை பற்றி விரிவுரையாற்றினார். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

கோவில்கண்ணப்பூர் தி. மு. கழகம்

ஆண்டுவிழா பொதுக் கூட்டம்

18—5—54 மாலை 6-30 மணியளவுக்கு திரு வி. க. திடலில், கழக முதலாவது ஆண்டுவிழா பொதுக் கூட்டம் தோழர் எ. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, பி. எம். வைத்திலிங்கம், ஜி. என். வேலன், க. குஞ்சிதபாதம் ஆகியோர் பேசினர்.

தாராபுரம் தி. மு. கழக பொதுக் கூட்டம்

9—5—54 மாலை 7 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், புத்தூர் மணியக்காரர் பேட்டையில் தோழர் டி. சி. கருப்பண்ணன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் என். அப்பாவு கழகக் கொள்கையை விளக்கிப் பேசினார். பின்னர் ஈ. வே. கி. சம்பத் திராவிட நாட்டுப் பிரிவினை குறித்தும், தற்கால அரசியல் குறித்தும் விரிவுரையாற்றினார்.

திருப்பூரில் மே தினப் பொதுக்கூட்டம்

8—5—54 மாலை 6 30 மணியளவில், தொழிலாளர் பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில் தோழர் எம். பி. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர்கள் பல்லடம் பொன்னுசாமி, ஈரோடு என். அப்பாவு, ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

செண்பகராயநல்லூரில் தி. மு. க. கிளை

10—5—54ல் திருத்துறைப்பூண்டி தாலுகா செண்பகராயநல்லூரில் தி. மு. கழகக் கிளை நிறுவப்பட்டது:— செயலாளர்: எம். வி. சாம்பசிவம்; துணைச் செயலாளர்: என். எம். இராமையன்; பொருளாளர்: வி. பி. இராமையன்; மாவட்டப் பிரதிநிதி: ஆர். வி. இராமச்சந்திரன்; உறுப்பினர்கள்: எம். கருமையன், என். என். இராமையன்; சி. முருகையன், ஆர். வடிவேல் என். வடிவேல், என். சுப்ரமணியன், என் ஜெகநாதன்.

சித்தர்கள் முறையை சீரமைக்கவும்

— —

டாக்டர் குருசாமி வேண்டுகோள்

சென்னை புரசைவாக்கம் நகரசபை பள்ளியில் நடைபெற்ற சித்த வைத்தியர்கள் மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில் டாக்டர் குருசாமி அவர்கள் தென்னாட்டில் உள்ள சித்த வைத்தியர்கள், சித்த முறையில் ஆராய்ச்சிகள் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இம்மாநாட்டில் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் 200-க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

டாக்டர் குருசாமி அவர்கள் மேலும் பேசுகையில், "சித்த வைத்தியர்கள், சைவ மடாதிபதிகளிடம் சென்று சைவ சித்தாந்த முறையை அடிப்படையாகக் கொண்டுள்ள சித்த வைத்திய முறைக்குப் பொருளாதார உதவி பெற வேண்டும்," என்று கூறினார்.

முதலாவது இந்தியப் பெண் இஞ்சினீயர்

தோழியர் உஷா தேவ் கர்னல் காஸ்டர், இங்கிலாந்தில் தனதுமூன்றாண்டு இஞ்சினீயரிங் படிப்பை முடித்துக்கொண்டு எம். என். வி. பட்டம் பெற்று பம்பாய் திரும்பினார்.

இஞ்சினீயரிங் துறையில் மேல் நாட்டில் பட்டம் பெற்ற முதலாவது இந்தியப் பெண்மணி இவரே யாவார்!

காலஞ் சென்ற சேட் தேவ்ச்சந்த் காஸ்டரின் குமாரியான உஷா பம்பாய் பல்கலைக் கழகத்தில் பி. ஏ., பட்டம் பெற்று, லண்டன் இம்பீரியல் காலேஜ் ஆப் சயின்ஸ் என்ற கல்லூரியில் 'மைனிங்' பற்றி தனிப் பயிற்சி பெற்றிருக்கிறார்.

கல்லக்குடி-தூத்துக்குடி வழக்குகளை வாபஸ் வாங்கக் கோரிக்கை

— —

கல்வித் திட்டம் ஒழிந்ததற்கு மகிழ்ச்சி

— —

ஆவடியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

20—5—54 வியாழன் மாலை 6 மணிக்கு ஆவடி தி. மு. கழகத்தின் சார்பில், தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ., தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் தி. மு. கழகக் கொள்கைகளையும், கல்வித் திட்டத்தையும் குறித்துப் பேசினார். தோழர் வி. என். கோவிந்தராசன் திராவிடர் இயக்கம் கல்வித் திட்ட ஒழிப்புக்கு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை விவரித்து, 'ஆச்சாரியாரின் அகம்பாவமும் ஆணவமும், அவரது வீழ்ச்சியும் வருங்கால முதல்வர்களுக்கு பாடமாக இருக்கவேண்டும்' என்றார். மேலும் அவர் கல்வித் திட்டத்தை ஒழித்தமைக்கு பாராட்டிவிட்டு, வேலையின்மை, கிராம பிரச்னை போன்றவைகளை உடனடியாக கவனித்து ஆவன செய்யவேண்டுமென்றும், கல்லக்குடி, தூத்துக்குடி வழக்குகளை வாபஸ் வாங்கி நீதி வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது)

பின்னர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தி. மு. கழகத்தின் கடந்த கால வரலாற்றையும் நடைமுறையையும் விளக்கி கம்மை எதிர்த்தவர்கள் கல்விதம் ஆதரவாளர்களாக மாறி வந்திருக்கின்றனர் என்பதைக் குறிப்பிட்டு, திராவிட நாடு பிரிவினைப் பிரச்னையில் தொழிலாளர் தம் கடமை என்ன என்பதை எடுத்துவிளக்கினார்; திராவிடம் இன்றுள்ள நிலையையும், பிரிவினைக்குப்பின் அடையப்போகும் மாறுதலையும் விவரித்தார்.

பின்னர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ, அவர்கள், மதம் கடவுள் புராணம் என்பவைகளின் புரட்டை விளக்கி அவற்றால் சமுதாயமும் மக்களும் அடைந்துள்ள இழிநிலையும், தன்மானம் வீழ்ந்துபட்ட தன்மையையும் விவரித்தார்; வர்ணாசிரம முறையால் உயர்ந்த நிலையிலுள்ளவர்கள் மேலும் உயரவும், சமுகத்தின் அடித்தளத்தில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் மேலும் மேலும் துன்பங்களை எவ்விதம் அனுபவிக்கிறார்கள் என்பதை எடுத்துரைத்து, தி. மு. கழகத்தையும், அண்ணா அவர்களின் அறிவுரையையும் ஏற்று இயக்கத்தை வலுப்பெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். தலைவரின் முடிவுரைக்குப் பின், கல்வித் திட்ட ஒழிப்புக்கறிகுறியாக இளஞ் சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

உலக அரங்கில்

வாஷிங்டன்: அபிசீனிய மன்னர் ஹெயிலி செலாசி, மத்திய கிழக்கு பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை தனது நாடு ஆதரிக்கும் என்று கூறினார். அபிசீனிய அரசர், ஐசன்ஹோவரின் விருந்தாளியாகத் தங்கியிருக்கிறார்.

• • •

பான் அமெரிக்கன் ஏர்வேஸ், யுனைட்டட் ஸ்டேட்ஸ் ஏர்லைன்ஸ், வட மேற்கு ஏர்லைன்ஸ் என்ற மூன்று விமானக் கம்பெனிகளிடையே நடைபெறும் வழக்கில் வழக்கறிஞர்கள் தங்கள் வாதங்களை முடித்துக்கொண்டனர். இந்த வழக்கு ஒரு ஆண்டுகாலமாக நடைபெறுகிறது.

★

லண்டன்: வாஷிங்டனில் நடைபெற இருக்கும் ஐந்து வல்லரசு இராணுவ மாநாட்டில், தான், பிரிட்டனின் பிரதிநிதியாக இருக்க விரும்புவதாக பீல்ட்மார்ஷல் சர் ஜான் ஹார்டிங் கூறினார்.

* * *

தென் கிழக்கு ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி பிரிட்டன் இன்னும் திட்டமான முடிவொன்றுக்கு வரவில்லை என்று அமைச்சர் செல்வின் லாயிட் கூறினார்.

* * *

குடல் கால்வாய் பற்றி பேச்சு வார்த்தைகளை தான் ஆரம்பிக்கப்போவதில்லை என்று பிரிட்டன் அறிவித்தது.

★

கெய்ரோ: சென்ற மாதத்தில் இராணுவத்தில் கலகம் செய்ய முயற்சித்ததாக 16 எகிப்திய இராணுவ அதிகாரிகள் தண்டிக்கப்பட்டனர்.

★

பெர்லின்: சோவியத் ரஷ்யாவின் முன்னாள் மதகுருவான பேரிஸ் எல்பவரைக் காரணமின்றி மேற்கு ஜெர்மானிய சர்க்கார் சிறைவைத்திருக்கின்றனர் என்று சோவியத் அதிகாரிகள் புகார் செய்தனர்.

★

நைரோபி: மாவ்-மாவ் ஆப்பிரிக்கக் கலகக்காரர்களை அடக்குவதில் வெற்றி கண்டுவிட்டதாக கிழக்கு ஆப்பிரிக்க இராணுவத் தலைமைக் காரியாலயம் அறிவித்தது.

★

நியூயார்க்: நோபல் பரிசு பெற்றவரும், ஐ. நா. சபையின் அதிகாரிகளில் ஒருவருமான டாக்டர் ரால்ப் பூஞ்சேயின் தேச பக்தியைச் சந்தேகிப்பது தவறு என்று கருப்பர் முன்னேற்ற தேசிய சங்கம் தெரிவித்தது. டாக்டர் பூஞ்ச்; விசாரணையில் இருக்கும் நீக்ரோ ஆவர்.

★

கொழும்பு: இலங்கை சர்க்காரின் நிர்ப்பந்த உத்திரவுகளினால் அநேக இந்திய ஆசிரியர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியிருக்கும் என்று இலங்கைக் கல்வி நிபுணர்கள் கருதுகின்றனர்.

* * *

இலங்கை இந்திய கமிஷனர் தேசாய் ஜூன் 2-ந் தேதி புதுடில்லிக்குச் செல்வார் என்று தெரிகிறது. இந்திய சர்க்காருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தவே அவர் செல்கிறார்.

★

கசபிளாங்கா: மொராக்கோ கலகக்காரர்களிடையே ஏற்பட்ட சச்சரவில் பிரெஞ்சுப் போலீஸ்காரர் ஒருவர் இறந்து போனதாக அறிவிக்கப்படுகிறது.

பெல்கிரேட்: யூகோஸ்லாவியாவில் ஐ. நா. சபைத் தலைவர் திருமதி விஜயலட்சுமி பண்டிட், ஜூன் 24-ந் தேதி முதல் எட்டு நாட்கள் சுற்றுப் பயணம் செய்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

★

கேப் டவுன்: டான்சிகேய் என்ற மாகாணத்தின் தலைநகரான உம்டாடாவின் கறுப்பர்கள், வெள்ளையர்கள் இருவரும் போஸ்டாபீசில் தனித்தனியே பிரித்து வைக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

★

பாங்காக்: அமெரிக்காவிலுள்ள தாய்லாந்தின் தூதுவர் ஜினிவாவில் உள்ள தாய்லாந்து வெளிநாட்டமைச்சரைச் சந்திக்க ஜினிவா செல்கிறார்.

★

காலிம்பாங்: திபேத்திற்கும் —சீனாவிற்கும் இடையே போக்குவரத்து வசதிகள் அதிகமாகி விட்டதால் இந்தியாவுடன் திபேத் நடத்தும் வியாபாரம் குறைந்துவிட்டது என்று திபேத்திலுள்ள இந்திய வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

★

போர்டக்ஸ்: பிரான்சின் போர்டக்ஸ் பகுதியில் ஐஸ் கட்டிகளைக் கொண்ட மழை பெய்ததால் பழ மரங்கள் ஏராளமாக நாசமாகி இருக்கிறது.

★

சிட்னி: கம்யூனிஸ்டு தோழர் பெட்ரோவை விசாரிக்கும் கமிஷனின் மொழி பெயர்ப்பாளர் ஆர்தர் பயர்ஸ் லண்டனிலிருந்து இரண்டு ரஷ்ய அதிகாரிகளுடன் சிட்னி வந்து சேர்ந்தார்.

★

ஆஸ்லோ: உலக செஞ்சிலுவைச் சங்கத்தின் கவர்னர்கள் ஸ்வீடன் தேசத்தைச் சேர்ந்த எமில் சாண்ட்ஸ்ட்ரோம் அவர்களை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

★

சிங்கப்பூர்: புலியைப்போல் தன் நண்பர்களுடன் விளையாடும்போது புதர் ஒன்றில் மறைந்து கொண்டு சமத்தின் அப்துல் கதிர் இசைப்புலி என்று நம்பி அவருடைய நண்பர்கள் எண்ணிக் கொண்டு சுட்டனர்; அசமத் மாண்டுபோனார்

★

அங்காரா: துருக்கியின் உதவிப் பிரதமராக பயின்றாத்து கோர்லு என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு அரசியலில் எவ்வித முன் அனுபவமும் இல்லையாதலால். இவரது நியமனம் கண்டு ஆளும் கட்சியான ஜனநாயகக் கட்சியினரே ஆச்சரியப்படுகின்றனர்.

காரைக்குடியில் குறள் விழா

★

30, 31—5—54 திருநாட்களில் காரைக்குடி காந்தி சதுக்கத்தில் நடைபெறும். முதல் நாள் மாலை 6 மணிக்கு தோழர்கள் கா. அப்பாதுரையார். உ. பழனி, வீரமணி, டி. கே. சீனிவாசன் ஆகியோர் பேசுவர். இரண்டாம் நாள் மாலை 6 மணிக்கு தோழர்கள் திருக்குறள் வீ. முனுசாமி, சி. இலக்குவனார், என். ஆர். சுப்பரமணியம், மு. அண்ணாமலை, தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

சிக்கநாயக்கன் பாளையம்

தி.மு.கழக துவக்க விழா

29—5—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: கருணைசாமி

துவக்குபவர்: கோவை செழியன்

பேசுபவர்: சிற்றுளி சுப்பிரமணியம்

★

சென்னையில் பொதுச்செயலாளர்

அயன்புரம்

மார்க்கெட் மைதானத்தில்

30—5—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: கே. ஏ. மதியழகன்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

* * *

கோடம்பாக்கம்

பவர் அவுஸ் பின்புறம்

31—5—54 மாலை 6 மணிக்கு

தலைவர் கோ. கா. புலிஅரசு

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

இசை: வேலழகன்

அன்று பகல் 11 மணி முதல் 1 மணி வரையில் தோழர் தேவராசன் தலைமையில் கிளைக் கழகக் கொட்டகையில் ஏழைகளுக்கு கஞ்சி வார்க்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

* * *

பெரம்பூர்

மூலக்கடை மைதானத்தில்

1—6—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: கண்ணதாசன்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

இசை: நாகூர் அனீபா

—கொளத்தூர் தி.மு.கழகம்

★

காங்கயம்

தேவாங்கபுரம் (ராமசாமி செட்டியார் திடல்)

30—5—54 மாலை 6½ மணிக்கு

தலைவர்: கே. சி. சுப்பிரமணியம்

பேசுவோர்:

கோவை செழியன்

சிற்றுளி சுப்பிரமணியம்

★

சண்பகபுரம்

30—5—54 ஞாயிறு மாலை

தலைவர்: சீனிவாசன்

பேசுபவர்: மணிஎழிலன்

★

திருச்சி

தேவர் மன்றத்தில்

பீமநகர் தி. மு. கழக 2-வது ஆண்டு விழா

30—5—54 காலை 9 மணிக்கு

பேசுவோர்;

மு. கருணாநிதி

எஸ். முத்து

எஸ். நெடுமாறன்

★

உதகமண்டலம்

30—5—54 மதியம் 1 மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

கூடலூர்

30—5—54 மாலை 7 மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

செய்திக் கதிர்

ஐக்கிய முன்னணி: திருவாங்கூர் — கொச்சியில் ஐக்கிய முன்னணியை நீடிப்பதென்று ஐக்கிய முன்னணி நிர்வாகக் கமிட்டி தீர்மானித்தது. திரு—கொச்சி ஐக்கிய முன்னணியிலிருந்து விலகுவதென்று புரட்சிகர சோஷலிஸ்டுகள் முன்பே முடிவு செய்தனர்.

★

நிலவளம்: நிலவளத்தைக் கண்டுபிடிக்கவும், உவர்ப்பு உரங்களால் நிலம் அடையும் பயனை ஆராயவும், தொழில் நுணுக்க உதவி பெறும் ஒப்பந்தமொன்றை, இந்தியா, அமெரிக்காவுடன் செய்து கொண்டது.

★

அரிசி: பர்மா அரிசி வரத் தொடங்கியதும் அரிசியின் விலை இறங்குமென்று கருதுகிறார்கள் மாநாட்டில் மத்திய உணவு உதவி மந்திரி கிருஷ்ணப்பா சென்னையில் கூறினார்.

★

போலீஸ் சட்டம்: அய்யம்பேட்டை, ஆடுதுறை, கீரனூர் முதலிய ஊர்களில் சென்னை நகர போலீஸ் சட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

★

நிர்வாண நடனம்: ஜப்பானில், பெண்கள் நிர்வாணமாக நாட்டியம் ஆடுவதைப் பார்க்க ஏராளமான பேர் வருவதாகவும், அந்த நடனத்தைப் பார்க்க சிறுவர்களும் அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும் ஜப்பான் சென்றுவந்த தோழர் ஒருவர் சென்னையில் கூறினார்.

★

நாடகம்: நடன நாடகங்கள் ஆகிய மற்ற நாடக நிகழ்ச்சிகளுக்கு தமாஷா வரி விதிப்பிலிருந்து மீண்டும் ஒரு வருஷத்துக்கு விலக்கு அளிப்பதாக சர்க்கார் உத்தரவு பிறப்பித்தனர்.

★

வெள்ளம்: கோசி நதியில் திடீரென்று வெள்ளம் வந்து மாதேபூர், தர்பங்கா ஜில்லாவில் பல கிராமங்கள் நாசமாயின. என்று தெரிகிறது.

★

வாழ்க்கைப் புள்ளி: மே 15-ந் தேதியுடன் முடியும் வாரத்தில் சென்னை நகர தொழிலாளர் வாழ்க்கைப் புள்ளி 341 ஆகும். சென்ற வாரத்தைவிட இது ஒரு புள்ளி அதிகமாகும்.

★

கடன்: தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷனுக்கு லண்டன் பண மார்க்கெட்டில் இந்தியா கடன் எழுப்பும் என்று தெரிகிறது. சென்ற யுத்தத்திற்குப் பிறகு இந்தியா, லண்டன் மார்க்கெட்டில் கடன் எழுப்புவது இதுவே முதல் தடவையாகும்.

★

கல்லூரி அனுமதி: இந்த ஆண்டு சென்னைத் தொழில் கல்லூரி அனுமதியில் மாறுதல் ஒன்று நிகழும். போட்டி மார்க்கு 60-க்குப் பதில் 100 ஆகும் என்று தெரிகிறது.

நடக்க இருப்பவை

குறள் சிறப்பு பொதுக்கூட்டம்

29—5—54 மாலை 5½ மணிக்கு மீர்சாகிப்பேட்டை, வைய முக்கையா முதலி 5-வது தெருவில் வள்ளுவர் இலவச வாசகசாலை முதல் சிறப்பு பொதுக்கூட்டம் தோழர் இறையன்னல் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், வி. எஸ். கோவிந்தராசன, முவை ஆர். என். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

எம். எஸ். பெரியசாமி படிப்பக ஆண்டு விழா

30—5—54 காலை 10 மணிக்கு விருதாவில் தோழர் வி. வி. ராமசாமி; எம். எஸ். சி. தலைமையில் நடைபெறும். அன்றிரவு 7 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், ஆசைத்தம்பி, அலிசேர் மன்சூர், என். ரத்தினம் மற்றும் பலர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

30—5—54 காலை 9 மணிக்கு செல்வபுரம் தி. மு. கழகக் கட்டடத்தில், 'மே தினமும், தி மு கழ மும்' என்பதுபற்றி சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

• • •

30-5-54 பிற்பகல் 2 மணிக்கு சென்னை, திருவல்லிக்கேணி பாண்டியன் படிப்பகத்தில் தோழர் என். ராசன் தலைமையில் 'சமுதாயம்' என்பது பற்றி சொற் பயிற்சி வகுப்பு நடைபெறும்.

பாண்டியூர்

(இராமநாதபுர மாவட்டம்)

அழகிரி திடலில்

தி.மு.கழக துவக்க விழா

30—5—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: நாகலிங்கம்

பேசுவோர்:

எஸ். முத்து

மு. பாண்டியன்

பகுத்தறிவு நூல் நிலையம் ஆண்டு விழா

30—5—54 காலை 9½ மணிக்கு சேலம் — செவ்வாய்பேட்டை வாசகசாலைத் தெருவிலுள்ள மறுமலர்ச்சி தேவாங்க தர்ம ஆண் பாடசாலையில் தோழர் ஏ. சித்தையன் தலைமையில் கொண்டாடப்படும். தோழர்கள் அபிலன்; இரா. சித்தன் பேசுவர்.

சென்னை 7-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர் கட்கு

30—5—54 காலை 9 மணிக்கு சென்னை 7-வது வட்டக் கிளை தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்

நாகை தி. மா. மு. கழக செ. கு. உறுப்பினர்கட்கு

30—5—54 காலை 10 மணிக்கு நாகை மேல கோட்டைவாசலில் உள்ள திராவிட மாணவர் கழகக் கட்டிடத்தில் செயற் குழு கூடும். அதுபோது மாணவர் கழகத்தின் மூன்றாம் ஆண்டுவிழா நடத்துதல் பற்றி ஆலோசிக்கப்படும்

பஜீக் நினைவுப் படிப்பகம் முதல் ஆண்டு விழா

30—5—54 மாலை 6½ மணிக்கு மதுரை, அண்ணா நிலையில் மேற்படி ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் எம். என். ராமசாமி, வே. சௌந்தரராசன், தோழியர் பொற்செல்வி இளமுருகு ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழக நிர்வாக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்கள், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுவது (24, ஜூலி நாராயண செட்டித் தெரு இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.